பொருட்களை அன்னிய நாட்டிலும் நமது நாட்டிலும் விற்பதற்கு வேறு சில முறைகளை அரசு கையாளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவரவர்களே, கலைப் பொருட்களை விற்பனை செய்யக்கூடிய பூம்புகார் போன்ற விற்பனைக் கூடங்கள் கண்காட்சியைப் போல சிறப்பாக இருக்கின்றன என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அது விற்பனை நிலையங்கள் தானே தவிர வெறும் கண்காட்சிக் கூடம் அல்ல.

இந்த விற்பனையை அதிகரிப்பதற்கு அரசு என்னென்ன செய்திருக்கிறது என்று கேட்கிறார்கள். 1978-79-ம் ஆண்டு 181 இலட்ச ரூபாய் அளவிற்கு விற்பனை செய்திருக்கின்றார்கள். சராசரியாக 130 இலட்சம், 140 இலட்சம் என்ற அளவில் முன்பு விற்பனை நடந்ததை விட 40 இலட்ச ரூபாய் அளவிற்கு அதிகமாக இந்த விற்பனை நிலையங்கள் மூலமாக விற்றிருக்கிறோம். வெளி நாடுகளுக்கும் கலை நுட்பம் கொண்ட சிற்பப் பொருட்கள் ஏற்றுமதி செய்யப் பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் கே. சமரசம்: தலைவரவர்களே, கைவினைப் பொருள் அபிவிருத் திக் கழகத்தின் விற்பனை நிலையங்கள் நான்கு மாவட்டங்களில் இல்லாமல் இருக்கின்றன என்று சொன்னார்கள். ஆனால் கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு புதிய விற்பனை நிலையம் ஆரம்பிக்க ஆவன செய்வதாகவும் சொன்னார் கள். தர்மபுரி மாவட்டத்திலும் இன்னும் இரண்டு மாவட்டங்களிலும் அப்படிப் பட்ட நிலையங்களை ஏற்படுத்துவதற்குரிய என்ன தகுதியை அவை இழந் திருக்கின்றன என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவர் அவர்களே, 4 மாவட் டங்களில் இப்போது கன்னியாகுமரி மாவட்டத்தை எடுத்திருக்கிறோம். வெளி நாட்டுக்காரர்கள் வந்து செல்வது, அங்குள்ள மக்கள் தொகை, அது சுற்றுலா மையமாக இருக்கிறதா என்பதைப் பார்த்து இந்தக் கூடங்களை அமைத்து கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன தர்மபுரி மாவட்டத்தையும் கவனித்து எடுத்துக் கொள்ளப்படும்.

கள்ளக்குறிச்சி வட்டத்தில் நவீன சவ்வரிசி ஆலை

***வினா எண் 872—திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன்:** மாண்புமிகு கிராமத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

கள்ளக்குறிச்சி வட்டத்தில் மிக அதிகமாக மரவள்ளிக் கிழங்குகளைப் பயன்படுத்தும் வகையில் நவீன சவ்வரிசி ஆலை (Modern Sago Factory) ஒன்றை நிறுவ அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

1979 ஏப்ரல் 28]

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மரவள்ளிக் கிழங்குகளைப் பயன் படுத்தும் வகையில் பொதுத்துறையில் நவீன சவ்வரிசி ஆலை நிறுவ நடவடிக்கை ஏதும் மேற்கொள்ளப்படவில்லை. தொழில் முனைவர்கள் தனியார் துறையில் புதிய சவ்வரிசி ஆலை துவங்க முன் வந்து மாவட்ட தொழில் மைய பொது மேலாளர்களை அணுகினால் அவர்கள் வேண்டிய உதவிகளைச் செய்வார்கள்.

திரு. துரை முத்துச்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே அதிகமாக மரவள்ளிக் கிழங்கு கிடைக்கின்றது. தனியாரே அதை நடத்தி லாபம் சம்பாதித்துக் கொண்டிருக்கிறார்கள். அங்கே இருக்கக் கூடிய அனைத்துக் கட்சிகளின் சார்பாக அரசாங்கம் நடத்த வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். அதை இந்த அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தென்னாற்காடு மாவட்டத்தில் ஏற்கெனவே 17 தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. தனியார் யாராவது முன் வந்தால் அவர்களுக்குத் தேவையான உதவி செய்வதற்கு அரசு தயாராக இருக்கிறது.

தமிழ்நாட்டில் விசைத்தறிகள்

*வினா எண் 873—**திரு. வி. கே. கோதண்டராமன்:** மாண்புமிகு கைத்தறி பஞ்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் இப்போதுள்ள மொத்த விசைத்தறிகள் எத்தனை?

(ஆ) மேலும் விஸ்தரிக்காமல் தடுக்கும் உத்தேசமுண்டா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : (அ) தமிழகத்தில் 28,043 அனுமதி பெற்ற விசைத்தறிகள் உள்ளன. மேலும் சுமார் 30,000 விசைத் தறிகள் அனுமதியின்றி செயல்பட்டு வருகின்றன என்று தெரிகின்றது.

(ஆ) ஆம்.

(இ) இப்பொழுது அனுமதியுடன் இயங்கிவரும் விசைத்தறிகளின் திறன் அதிகரிக்கப்படமாட்டாது. தற்பொழுது அனுமதியின்றி இயங்கிவரும் விசைத்தறிகளைக் கடுமையான அபராதம் வசூலித்த பின்பே அவற்றிற்கு அனுமதியளிக்கப்படும். மேலும் விசைத்தறிகளை அனுமதியின்றி தோன்றுவதைத் தடுக்க மத்திய அரசுச் சட்டம் இயற்றப் போவதாகக் கூறியிருக்கின்றனர்.